Sl. No. : 20977161

**VGT19**

பதிவு எண் | | | | | | | | | |

# 2016

# பொதுத் தமிழும் பொது அறிவும்

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் விடுபடாமல் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் ஏதேனும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வு பாடக் குறியீடு மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றை விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விவரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ Ⓑ Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. 81 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
13. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

ENGLISH VERSION OF INSTRUCTIONS IS PROVIDED ON THE BACK COVER OF THIS BOOKLET

SEAL

1. பொருளுக்கு ஏற்ற பொருத்தமான உவமையைத் தேர்ந்தெடுத்து எழுதுக
'காத்திருந்து ஏமாந்து போவது'

(A) மழைமுகம் காணாப் பயிர் போல

(B) இலவு காத்த கிளி போல

(C) அனலிடைப்பட்ட புழு போல

(D) கிணற்றுத் தவளை போல

2. 'தீண்டிற்று' என்ற வினைமுற்றுச் சொல்லின் வேர்ச்சொல்லைத் தேர்க

(A) தீண்

(B) தீண்டி

(C) தீ

(D) தீண்டு

3. இரண்டு அடி முதல் பன்னிரண்டு அடி வரை வரும் பா

(A) வெண்பா

(B) ஆசிரியப்பா

(C) வஞ்சிப்பா

(D) கலிப்பா

4. 'Whats App' என்ற சொல், பார்க்கவும் கேட்கவும் படிக்கவுமான மின்னஞ்சல் குறுஞ்செய்தி வசதியை முனைவர் ம. இராசேந்திரன் —————— என மொழி பெயர்த்துள்ளார்.

(A) தூதுலாவி

(B) கட்செவி அஞ்சல்

(C) எண்ண நகலி

(D) தூது செயலி



We Shine Academy TM

5. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை

(A) 8

(B) 10

(C) 11

(D) 12

6. சரியான விடையைத் தேர்வு செய்க

(A) இயல், இசை, நாடகம் முதலான முத்தமிழை வளர்த்தல் வேண்டும்

(B) இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழை வளர்த்தல் வேண்டும்

(C) இயல், இசை, நாடகம் முதலிய முத்தமிழை வளர்த்தல் வேண்டும்

(D) இயல், இசை, நாடகம் போன்ற முத்தமிழை வளர்த்தல் வேண்டும்

7. கோடிட்ட இடத்தில் உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.

'கூம்பு' என்பது ———————— பெயர் ஆகும்.

(A) அளவுப்பண்பு

(B) சுவைப்பண்பு

(C) வடிவப்பண்பு

(D) நிறப்பண்பு

8. ஆற்றுவார் – அசை பிரித்துக் காட்டுதலில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(A) ஆற் + று + வார்

(B) ஆற் + றுவார்

(C) ஆற்று + வார்

(D) ஆ + ற்று + வார்

9. கீழ்க்காணும் சொற்களுள் குற்றியலுகரம் அல்லாத சொல்லைத் தேர்ந்தெடு

(A) சுக்கு

(B) சார்பு

(C) உண்ணு

(D) அரசு

We Shine Academy TM

10. பொருள்கோள் வகைகளின் எண்ணிக்கை

(A) 4
(B) 6
(C) 8
(D) 10

11. 'அன்னபூரணி' எனும் புதின ஆசிரியர்

(A) ஜெயகாந்தன்
(B) அகிலன்
(C) வைரமுத்து
(D) க. சச்சிதானந்தன்

12. பொருத்துக :

(a) தமிழியக்கம் — 1. பாரதியார்
(b) சீட்டுக்கவி — 2. தோலா மொழித்தேவர்
(c) சேக்கிழார் பிள்ளைத்தமிழ் — 3. பாரதிதாசன்
(d) சூளாமணி — 4. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

13. பொருத்துக :

| நூல் | | புலவர் |
|---|---|---|
| (a) பெரியபுராணம் | 1. | திருத்தக்கத் தேவர் |
| (b) இராமாயணம் | 2. | உமறுப்புலவர் |
| (c) சீறாப்புராணம் | 3. | சேக்கிழார் |
| (d) சீவக சிந்தாமணி | 4. | கம்பர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 3 | 2 | 4 | 1 |


We Shine Academy ™

14. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வீரகாவியம் | 1. | நா. காமராசன் |
| (b) | இயேசு காவியம் | 2. | சிற்பி. பாலசுப்ரமணியம் |
| (c) | ஒளிப்பறவை | 3. | கண்ணதாசன் |
| (d) | சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் | 4. | முடியரசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

15. எச்.ஏ.கிருட்டிணனாருக்கு இலக்கணம் கற்பித்த ஆசிரியரின் பெயர்

(A) மாணிக்க வாசகத் தேவர்

(B) சங்கர நாராயணர்

(C) பிலவண சோதிடர்

(D) தெய்வநாயகி

16. சூடாமணி நிகண்டு – ஆசிரியர்

(A) திவாகரமுனிவர்

(B) பிங்கலம்

(C) வீரமண்டல புருடர்

(D) காங்கேயர்

17. "மொழிகளின் காட்சிச் சாலை இந்தியா"

– இக்கூற்று யாருடையது?

(A) பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்

(B) பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை

(C) பேராசிரியர் சாலை. இளந்திரையன்

(D) பேராசிரியர் சாலமன் பாப்பையா

We Shine Academy™

18. பொருத்துக :

(a) மூதுரை — 1. சிவப்பிரகாசர்

(b) வெற்றிவேற்கை — 2. முனைப்பாடியார்

(c) நன்னெறி — 3. அதிவீரராம பாண்டியர்

(d) அறநெறிச்சாரம் — 4. ஔவையார்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

19. 'மத்தவிலாசம்' – என்னும் நாடக நூலை எழுதியவர்

(A) இராஜ இராஜ சோழன்

(B) இராஜேந்திர சோழன்

(C) நந்திவர்மன்

(D) மகேந்திரவர்மன்

20. பாரதிதாசன் நூல்களில் பொருந்தாத நூல்

(A) குடும்ப விளக்கு

(B) பாண்டியன் பரிசு

(C) இருண்ட வீடு

(D) கள்ளோ காவியமோ

21. "ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"
எனும் பாடலடிகள் இடம் பெற்ற நூல்

(A) குறுந்தொகை

(B) புறநானூறு

(C) பதிற்றுப்பத்து

(D) பத்துப்பாட்டு

We Shine Academy™

22. "மேற்கணக்கு நூல்கள்" என்று அழைக்கப்படுபவை

(A) எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்

(B) நீதி இலக்கியம்

(C) பக்தி இலக்கியம்

(D) இக்கால இலக்கியம்

23. ஐராவதீசுவரர் கோயிலைக் கட்டிய அரசன்

(A) இரண்டாம் இராசராசன்

(B) இராசேந்திரன்

(C) குலோத்துங்கன்

(D) கிள்ளி வளவன்

24. சரியான விடையைத் தேர்ந்தெடு

பறவைகள் இடம்விட்டு இடம் பெயர்வதை ———— என்பர்.

(A) இடம் பெயர்தல்

(B) புலம் பெயர்தல்

(C) வலசை போதல்

(D) ஊர் விட்டு ஊர் செல்லல்

25. சிறு பஞ்ச மூலத்தில் கடவுள் வாழ்த்துடன் எத்தனை வெண்பாக்கள் உள்ளன?

(A) தொண்ணூறு

(B) தொண்ணூற்றேழு

(C) நூறு

(D) ஐம்பது



We Shine Academy™

26. 'நவ்வி' எனும் சொல்லின் பொருள்

(A) மான் (B) நாய்

(C) நரி (D) செந்நாய்

27. தமிழில் காணும் முதல் சித்தர்

(A) திருமூலர் (B) அருணகிரிநாதர்

(C) தாயுமானவர் (D) வள்ளலார்

28. பொருத்துக :

(a) வண்டு 1. குனுகும்

(b) புறா 2. அலப்பும்

(c) பூனை 3. முரலும்

(d) குரங்கு 4. சீறும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

29. தென்னாப்பிரிக்க நாட்டில் இந்தியரின் நலனுக்காகப் போராடிய வீரத்தமிழ் மங்கை

(A) ஈ.வெ.ரா. மணியம்மை

(B) கஸ்தூரிபாய்

(C) வேலுநாச்சியார்

(D) தில்லையாடி வள்ளியம்மை



We Shine Academy™

30. மணிமேகலையில் உள்ள காதைகளின் எண்ணிக்கை

(A) 10 (B) 20

(C) 30 (D) 40

31. பொருந்தாத ஒன்றைக் கண்டுபிடி

(A) யசோதர காவியம் (B) நாககுமார காவியம்

(C) உதயகுமார காவியம் (D) வளையாபதி

32. "செல்வத்துப் பயனே ஈதல்" – எனும் தொடர் இடம்பெற்றுள்ள நூல்

(A) திருக்குறள் (B) பரிபாடல்

(C) பதிற்றுப்பத்து (D) புறநானூறு

33. 'தேவார மூவர்' எனப்படுவோர்

(A) திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், மணிவாசகர்

(B) அப்பர், சுந்தரர், மணிவாசகர்

(C) நம்பி ஆரூரன், மணிவாசகர், திருநாவுக்கரசர்

(D) சம்பந்தர், அப்பர், சுந்தரர்

34. 'ஊக்கம் உடையான் ஒடுக்கம்' – எதைப் போன்றது

(A) பதுங்கும் புலி (B) வளைந்து நிற்கும் வில்

(C) பின்வாங்கி நிற்கும் ஆடு (D) சீறும் பாம்பு



We Shine Academy TM

35. ‘தமிழ்மாதின் இனிய உயிர்நிலை’ எனப் போற்றப்படும் நூல்

(A) கம்பராமாயணம்

(B) சிலப்பதிகாரம்

(C) திருக்குறள்

(D) நாலடியார்

36. ஞாலத்தின் மாணப் பெரிது

(A) எதிர்பாராமல் செய்யப்படும் உதவி

(B) பயனை எதிர்பார்த்துச் செய்யும் உதவி

(C) தகுந்த நேரத்தில் செய்யப்படும் உதவி

(D) பயனை எதிர்பாராமல் செய்த உதவி

37. “பரணிக்கோர் சயங்கொண்டான்”

என்று கலிங்கத்துப்பரணியை இயற்றிய புலவரைப் புகழ்ந்தவர்

(A) பலபட்டடைச் சொக்கநாதர்

(B) குமரகுருபரர்

(C) தாயுமானவர்

(D) இராமலிங்கர்

38. ‘உலா’ எனும் சிற்றிலக்கியம் பாடப்பெறும் பாவகை

(A) கலிவெண்பா

(B) ஆசிரியப்பா

(C) விருத்தப்பா

(D) வஞ்சிப்பா



We Shine Academy™

39. பிறமொழிச் சொற்களை நீக்கித் தூய தமிழில் உள்ளதை எழுதுக

(A) நீ தான் என் அத்யந்த ஸ்நேகிதன் என்று கூறிச் சந்தோஷித்தான்

(B) நீ தான் என் நெருங்கிய நண்பன் என்று கூறி மகிழ்ச்சி அடைந்தான்

(C) நீ தான் என் அத்யந்த நண்பன் என்று கூறிச் சந்தோஷம் அடைந்தான்

(D) நீ தான் என் அத்யந்த நண்பன் என்று கூறி சந்தோஷப்பட்டான்

40. பருப்பு உள்ளதா? – இது எவ்வகை வினா?

(A) கொளல் வினா

(B) கொடை வினா

(C) ஐய வினா

(D) ஏவல் வினா

We Shine Academy™

41. அகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ளதை எழுதுக

(A) பாட்டு, பட்டு, பையன், பௌவம்

(B) பட்டு, பாட்டு, பௌவம், பையன்

(C) பையன், பௌவம், பட்டு, பாட்டு

(D) பட்டு, பாட்டு, பையன், பௌவம்

42. பின்வருவனவற்றைப் பொருத்துக :

(a) வினைப்பயன் விளையுங்காலை உயிர்கட்கு — 1. பத்துவகைக் குற்றங்களின் பயன்
(b) மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய் என்று — 2. பத்தின் நீங்கித் தானம், சீலம், தாங்குவது
(c) தீவினை என்பது — 3. மனப்பேரின்பமும், கவலையும் வாட்டும்
(d) நல்வினை என்பது — 4. அலகில் பல்லுயிர் அறுவகைத்தாகும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

43. ''வருவையாகிய சின்னாள் வாழா ளாதல்''

– இந் நற்றிணைப் பாடலில் 'சின்னாள்' என்பது

(A) சில நாள்
(B) சிறு நாள்
(C) சிறிய ஆள்
(D) சின்ன ஆள்

44. திணையுடன் உரிப்பொருளைப் பொருத்துக :

(a) குறிஞ்சி — 1. இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
(b) முல்லை — 2. இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
(c) மருதம் — 3. புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
(d) நெய்தல் — 4. ஊடலும் ஊடல் நிமித்தமும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

45. 'ஐ' என்னும் சொல்லின் பொருள்

(A) அரண்
(B) சோலை
(C) காவல்
(D) தலைவன்

We Shine Academy™

46. அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்க

(A) சீப்பு, சங்கு, சைதை, சொல்

(B) சங்கு, சீப்பு, சைதை, சொல்

(C) சைதை, சொல், சீப்பு, சங்கு

(D) சொல், சைதை, சங்கு, சீப்பு

47. காய்கனி – இதில் அமைந்துள்ள தொகைநிலைத் தொடரைக் கண்டறிக

(A) வினைத் தொகை

(B) உம்மைத் தொகை

(C) உவமைத் தொகை

(D) பண்புத் தொகை

48. நாற்கரணம் – சரியாகப் பிரிக்கப்பட்டிருப்பது எது?

(A) நான்கு + அரணம்

(B) நான் + கரணம்

(C) நாண் + கரணம்

(D) நான்கு + கரணம்

49. "அளவில் சனம் உளமனைய குளம் நிறைந்த வளமருவும்" தொடரில் அடிக்கோடிட்ட எழுத்துகள் குறிக்கும் தொடை

(A) மோனை

(B) முரண்

(C) இயைபு

(D) எதுகை

50. திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவனிடம் கேட்பது

(A) அறிவினா

(B) ஐய வினா

(C) அறியா வினா

(D) கொளல் வினா



We Shine Academy™

51. 'திருச்செந்திற் கலம்பகம்' என்னும் நூலை இயற்றியவர்

(A) ஞானதேசிகர்
(B) ஈசான தேசிகர்
(C) தெய்வசிகாமணி
(D) முத்துகுமாரசாமி

52. பொருத்துக :

(a) சொல்லின் செல்வர் — 1. திரு.வி. கல்யாணசுந்தரனார்
(b) வசனநடை வல்லாளர் — 2. சாத்தனார்
(c) தமிழ்த் தென்றல் — 3. ஆறுமுக நாவலர்
(d) தண்டமிழ் ஆசான் — 4. ரா.பி. சேதுப்பிள்ளை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

53. பொருத்துக :

(a) தொன்னூல் விளக்கம் — 1. குமரகுருபரர்
(b) நாலடியார் — 2. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
(c) திருவேங்கடத்து அந்தாதி — 3. வீரமாமுனிவர்
(d) மதுரைக் கலம்பகம் — 4. சமணமுனிவர்கள்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

We Shine Academy TM

54. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | புத்தகச்சாலை | 1. | வாணிதாசன் |
| (b) | தீக்குச்சிகள் | 2. | சுரதா |
| (c) | சிக்கனம் | 3. | பாரதிதாசன் |
| (d) | காடு | 4. | அப்துல்ரகுமான் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

55. கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் என்பதனைக் கூறும் நூல்

(A) பதிற்றுப்பத்து
(B) புறநானூறு
(C) பரிபாடல்
(D) நெடுநல்வாடை

56. "சீடைக் காகச் சிலேட்டு பணயம்
முறுக்குக் காக மோதிரம் பணயம்
காப்பிக் காகக் கடுக்கன் பணயம்"
இப்பாடலின் ஆசிரியர் யார்?

(A) கவிமணி தேசிக விநாயகம்
(B) கவிப்பேரரசு வைரமுத்து
(C) கவிஞர் மு. மேத்தா
(D) குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

57. திரு.வி.கல்யாணசுந்தரனார் எழுதாத நூல்

(A) முருகன் அல்லது அழகு
(B) நாயன்மார் வரலாறு
(C) தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
(D) சத்தியவேத கீர்த்தனைகள்

We Shine Academy™

58. ‘குறிஞ்சித் திட்டு’ எனும் நூலை இயற்றியவர்

(A) பாரதியார்

(B) பாரதிதாசன்

(C) சுரதா

(D) கவிமணி

59. ‘வீர சோழியம்’ என்னும் இலக்கண நூலை இயற்றியவர்

(A) காரியாசான்

(B) புத்தமித்திரர்

(C) பவணந்தி முனிவர்

(D) வீரமா முனிவர்

60. நெஞ்சாற்றுப்படை என அழைக்கப்படும் நூல்

(A) குறிஞ்சிப்பாட்டு

(B) முல்லைப் பாட்டு

(C) பட்டினப்பாலை

(D) மதுரை காஞ்சி

61. தமிழகத்தை எழுபத்திரண்டு பாளையங்களாகப் பிரித்து ஆண்டவர்கள்

(A) பாண்டியர்கள்

(B) நாயக்கர்கள்

(C) சேரர்கள்

(D) சோழர்கள்



We Shine Academy™

62. 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்'
– என ஓவியருக்கு இலக்கண உரை வகுத்தவர்

(A) தொல்காப்பியர்
(B) அடியார்க்கு நல்லார்
(C) நச்சினார்க்கினியர்
(D) அகத்தியர்

63. சரியான விடையைத் தேர்ந்தெடு

கீழ் உள்ளவற்றுள் தமிழ் நாட்டில் பறவைகள் புகலிடங்களுள் ஒன்று

(A) திருநின்றவூர்
(B) கரூர்
(C) வடுவூர்
(D) பேரூர்

64. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரின் பட்டப்பெயர்

(A) புரட்சிக் கவிஞர்
(B) உவமைக் கவிஞர்
(C) மக்கள் கவிஞர்
(D) இயற்கைக் கவிஞர்

65. தேம்பாவணியில் 'வளன்' என்னும் பெயர்ச்சொல்லால் குறிக்கப்படுபவர்

(A) இயேசு கிறிஸ்து
(B) சூசை மாமுனிவர்
(C) தாவீது
(D) கோலியாத்து

66. "நான் தனியாக வாழவில்லை; தமிழோடு வாழ்கிறேன்" எனக் கூறியவர்

(A) நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை
(B) இராமலிங்க அடிகளார்
(C) திரு வி. கல்யாண சுந்தரனார்
(D) பேரறிஞர் அண்ணா



We Shine Academy ™

67. பேராயக் (காங்கிரஸ்) கட்சியிலிருந்து விலகிய பின், தந்தை பெரியார் தம்மை இணைத்துக் கொண்ட இயக்கம்

(A) நீதிக்கட்சி

(B) சுயராச்சியக் கட்சி

(C) திராவிடர் கழகம்

(D) பொதுவுடைமைக் கட்சி

68. கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் யாருடைய ஞானாசிரியர்?

(A) பெ. சுந்தரம் பிள்ளை

(B) தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை

(C) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

(D) ரா.பி. சேதுப்பிள்ளை

69. புத்தபிரானின் பாதத்தில் எத்தனை சக்கர ரேகை உண்டு எனச் சாத்தனார் புகழ்கிறார்?

(A) 100 (B) 1,000

(C) 500 (D) 900

70. "களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது இதுவென் கொல்"
– இங்ஙனம் கூறியவர்

(A) மதுரை மக்கள்

(B) கவுந்தி அடிகள்

(C) சீத்தலைச் சாத்தனார்

(D) கண்ணகி

We Shine Academy TM

71. "நெடுந்தேர் ஊர்மதி வலவ"

– இந்த அகநானூற்று அடியில் உள்ள 'வலவ' என்பதன் பொருள்

(A) தேர்ப்பாகன் (B) யானைப்பாகன்

(C) வாயிற்காப்போன் (D) போர்வீரன்

72. "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ; ஆறாதே

நாவினாற் சுட்ட வடு"

– இக்குறட்பாவின் படி கீழ்க்கண்டவற்றுள் எது சரி?

(A) தீப்புண், நாப்புண் ஆறாதவை

(B) நாப்புண் ஆறும் ; தீப்புண் ஆறாது

(C) தீப்புண் ஆறும் ; நாப்புண் ஆறாது

(D) தீப்புண்ணும் நாப்புண்ணும் ஆறிவிடும்

73. நேயர் விருப்பம், விலங்குகள் இல்லாத கவிதை ஆகிய நூல்களை இயற்றியவர்

(A) தாரா பாரதி (B) அப்துல் ரகுமான்

(C) ஆலந்தூர் கோ. மோகனரங்கன் (D) மீரா

74. 'பீலிபெய் சாகாடும்' என்பதில் 'சாகாடு' என்ற சொல்லின் பொருள்

(A) சுடுகாடு (B) வண்டி

(C) மண்டி (D) இடுகாடு

75. 'தமிழ் நாடகக்கலைக்கு ஒரு பெர்னாட்ஷா' எனப் பாராட்டப் பெற்றவர்

(A) சங்கரதாசு சுவாமிகள்

(B) பம்மல் சம்மந்த முதலியார்

(C) அறிஞர் அண்ணா

(D) தி.க. சண்முகம்



We Shine Academy™

76. பிரெஞ்சுக் குடியரசுத் தலைவரால் 'செவாலியர்' விருது பெற்ற கவிஞர்

(A) கண்ணதாசன்
(B) வாணிதாசன்
(C) முடியரசன்
(D) மு. மேத்தா

77. "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே"

(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) வாணிதாசன்
(D) கம்பதாசன்

78. பொருந்தாத இணையைக் குறிப்பிடுக :

(A) சிற்றிலக்கியங்கள் – தொண்ணூற்றாறு
(B) திருக்குறள் – முப்பால்
(C) மலைபடுகடாம் – கூத்தராற்றுப்படை
(D) பரிபாடல் – பத்துப்பாட்டு

79. வள்ளை என்பது

(A) ஏற்றநீர் பாட்டு
(B) நடவுப் பாட்டு
(C) உலக்கைப் பாட்டு
(D) தாலாட்டு

80. பட்டியல் I-இல் உள்ள சொற்களை பட்டியல் II-இல் உள்ள சொற்களோடு பொருத்திக் கீழே உள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| (a) | அறுவை வீதி | 1. | மள்ளர் வாழும் வீதி |
| (b) | கூல வீதி | 2. | பொற் கடை வீதி |
| (c) | பொன் வீதி | 3. | தானியக் கடை வீதி |
| (d) | மள்ளர் வீதி | 4. | ஆடைகள் விற்கும் கடை வீதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

**VGT19**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# 2016

# GENERAL TAMIL WITH GENERAL STUDIES

**Time Allowed : 3 Hours]** **[Maximum Marks : 300**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. This Booklet has a cover (this page) which should not be opened till the invigilator gives signal to open it at the commencement of the examination. As soon as the signal is received you should tear the right side of the booklet cover carefully to open the booklet. Then proceed to answer the questions.
2. This Question Booklet contains **200** questions. Prior to attempting to answer the candidates are requested to check whether all the questions are there in series without any omission and ensure there are no blank pages in the question booklet. In case any defect in the Question Paper is noticed it shall be reported to the Invigilator within first 10 minutes.
3. Answer all questions. All questions carry equal marks.
4. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
5. An Answer Sheet will be supplied to you separately by the Invigilator to mark the answers.
6. You will also encode your Register Number, Subject Code, Question Booklet Sl. No. etc. with Blue or Black Ball point pen in the space provided on the side 2 of the Answer Sheet. If you do not encode properly or fail to encode the above information, action will be taken as per commission's notification.
7. Each question comprises *four* responses (A), (B), (C) and (D). You are to select ONLY ONE correct response and mark in your Answer Sheet. In case, you feel that there are more than one correct response, mark the response which you consider the best. In any case, choose ONLY ONE response for each question. Your total marks will depend on the number of correct responses marked by you in the Answer Sheet.
8. In the Answer Sheet there are **four** circles Ⓐ, Ⓑ, Ⓒ and Ⓓ against each question. To answer the questions you are to mark with Blue or Black ink Ball point pen ONLY ONE circle of your choice for each question. Select one response for each question in the Question Booklet and mark in the Answer Sheet. If you mark more than one answer for one question, the answer will be treated as wrong. *e.g.* If for any item, Ⓑ is the correct answer, you have to mark as follows :

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. You should not remove or tear off any sheet from this Question Booklet. You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Hall during the examination. After the examination is concluded, you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. The sheet before the last page of the Question Booklet can be used for Rough Work.
11. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide at their discretion.
12. For Question No. 81 to 200 in all matters and in cases of doubt, the English Version is final.
13. Do not tick-mark or mark the answers in the Question booklet.



SEAL

We Shine Academy™